பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

08 03 2026 SUNDAY 7 15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- மகளிரின் கல்வி பொருளாதார மேம்பாட்டிற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
- மேற்குவங்கத்தில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் அரசு, குடியரசுத்தலைவரை அவமதித்துள்ளது கண்டிக்கத்தக்கது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- பீகார் முதலமைச்சர் திரு. நிதிஷ்குமாரின் மகன் திரு. Nishant Kumar ஐக்கிய ஜனதா தள கட்சியில் இணைந்துள்ளார்.
- சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை இந்தியா வலியுறுத்தியுள்ளது.
- உலக கோப்பைக்கான தகுதிச் சுற்று மகளிர் ஹாக்கி போட்டியில், இந்தியா - உருகுவே இடையேயான ஆட்டம் இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

>>>>><<<<<

மகளிர் தலைமையிலான வளர்ச்சிக்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்துள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி புதுதில்லியில் நடைபெற்ற தேசிய மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

அனைத்து துறைகளிலும் பெண்கள் முத்திரை பதித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பெண்களின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக திருமதி. திரௌபதி முர்மு கூறினார்.

>>>>><<<<<

நாட்டின் வளர்ச்சியில் பெண்களின் சாதனைகள் அனைத்தும் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி, இன்று திரிபுராவின் Hapania-வில் மகளிர் சுயஉதவி குழுவினருடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மகளிர் மேம்பாட்டிற்காக, மத்திய அரசு கடந்த பத்தாண்டுகளில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>><<<<<

மேற்குவங்கத்தில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் அரசு, குடியரசுத்தலைவரை அவமதித்துள்ளது கண்டிக்கத்தக்கது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பழங்குடியின மக்களின் மிகப் பெரிய திருவிழாவில் பங்கேற்பதற்காக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு மேற்குவங்கம் சென்றதை பிரதமர் சுட்டிக்காட்டினர்.

இதற்காக, குடியரசுத்தலைவரை கௌரவிக்க வேண்டிய திரிணாமுல் காங்கிரஸ் அரசு, அந்த நிகழ்ச்சியை புறக்கணித்ததாக அவர் குறை கூறினார்.

இதன்மூலம் ஜனநாயக மாண்புகளுக்கு எதிராக மேற்குவங்க அரசு செயல்பட்டுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>><<<<<

மேற்குவங்கத்தில் குடியரசுத் தலைவருக்கு நிகழ்ந்த அவமதிப்பு, கண்டிக்கத்தக்கது என்று மத்திய பழங்குடியின நலத்துறை அமைச்சர் திரு. Jual Oram கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேற்குவங்க அரசின் செயல்பாடு துரதிருஷ்டவசமானது என்று தெரிவித்தார்.

இது பழங்குடியின மக்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

*மேற்குவங்க சட்டப்பேரவை தேர்தலில் இதற்கு, பழங்குடியின மக்கள் உரிய பதிலடி கொடுப்பார்கள் என்றும் திரு. Jual Oram தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*மேற்குவங்கத்தில் குடியரசுத் தலைவருக்கான மரபுகள் பின்பற்றப்படாதது கண்டிக்கத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட்-டாக்டர் எல். முருகன் 57 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் கூறியுள்ளார்.*

*இங்கிலாந்தில் நடைபெற்ற காமன்வெல்த் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.*

*சர்வதேச அமைப்புகளில் வளரும் நாடுகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் திரு. கீர்த்தி வர்தன் சிங் கேட்டுக் கொண்டார்.*

*>>>>><<<<<*

*நாடுமுழுவதும் ஆயுஷ் மருத்துவமனைக்கான கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.*

*கோவாவில் உள்ள அகில இந்திய ஆயுர்வேதா மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மருத்துவ சேவைகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.*

*பாரம்பரிய மருத்துவமுறை உலக அளவில் பிரபலமடைந்து வருவதாக அமைச்சர் கூறினார்.*

*>>>>><<<<<*

*வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்திற்கான இலச்சினை வடிவமைப்பதற்கான போட்டியை மத்திய அரசு அறிவித்துள்ளது.*

*mygov* இணையதளத்தை பயன்படுத்தி, பொதுமக்கள் தங்களுடைய படைப்புகளை சமர்ப்பிக்கலாம் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

மேற்குவங்க சட்டப்பேரவை தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக தலைமை தேர்தல் ஆணையர் திரு. *Gyanesh Kumar* தலைமையிலான குழுவினர் இன்று கொல்கத்தா செல்கின்றனர்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுடன், இக்குழுவினர் விரிவான ஆலோசனை மேற்கொள்ளவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

பீகார் முதலமைச்சர் திரு. நிதிஷ்குமாரின் மகன் திரு. *Nishant Kumar* ஐக்கிய ஜனதா தள கட்சியில் இணைந்துள்ளார்.

பாட்னாவில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தேசிய செயல் தலைவர் திரு. சஞ்சய் ஜா, மத்திய அமைச்சர் திரு. ரஞ்சன் சிங் லாலன் முன்னிலையில் அவர் கட்சியில் இணைந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. *Nizhant Kumar,* ஐக்கிய ஜனதா தள கட்சியை மேலும் வலுப்படுத்த தாம் பணியாற்றப் போவதாக கூறினார்.

>>>>><<<<<

ஆந்திராவில் மகளிர் சுயஉதவி குழுக்களை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

இன்று அமராவதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மகளிர் சுயஉதவி குழுக்கள் மூலம் தொழில் முனைவோர்களாக உருவாகி, சாதனை படைத்த 5 பெண்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கி அவர் பேசினார்.

மகளிர் சுய உதவி குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு உரிய வர்த்தக வாய்ப்புகள் ஏற்படுத்தி தரப்படும் என்றும் திரு. சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

>>>>><<<<<

சத்திஷ்கடில் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தின் கீழ், 25வது தவணைத் தொகையை அம்மாநில முதலமைச்சர் திரு. விஷ்ணு தியோசாய் இன்று விடுவித்தார்.

Jagdalpur-ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் இத்தொகையை விடுவித்த தாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த திட்டத்தின் கீழ், 69 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்து வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உத்தரபிரதேசத்தில் சிறப்பாக பணியாற்றிய பெண் ஊழியர்களுக்கான விருதுகளை, அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் இன்று வழங்கினார்.

லக்னோவில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் பெண் பயனாளிகளுக்கு முதலமைச்சர் வழங்கியதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

பஞ்சாப் அரசின் வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை, அம்மாநில சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

நிதியமைச்சர் திரு. Harpal Singh Cheema இதனை தாக்கல் செய்தார்.

வருவாய் பற்றாக்குறை 2 புள்ளி பூஜ்யம் ஆறு சதவீதமாக இருக்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் நிலையிலான கூட்டம் Cameroon-ன் Yaounde-யில் வரும் 26ஆம் தேதி தொடங்கி 29ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

166 நாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் இதில் பங்கேற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வர்த்தக அமைப்பில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

உலக கோப்பைக்கான தகுதிச் சுற்று மகளிர் ஹாக்கி போட்டி ஹைதராபாதில் இன்று தொடங்கியது

இந்தியா, முதல் ஆட்டத்தில் உருகுவே-யை எதிர்கொள்கிறது.

*இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்கவுள்ளது.*

*>>>>><<<<<*

*உலகக் கோப்பை டிவெண்ட்டி டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா - நியூஸிலாந்து இடையேயான இறுதியாட்டம் சற்றுமுன் தொடங்கியது.*

*அஹமதாபாத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில், டாஸ் வென்ற நியூஸிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.*

*இதனையடுத்து பேட் செய்து வரும் இந்தியா 4 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 51 ரன் எடுத்துள்ளது.*

*>>>>><<<<<*

*Kalaburagi சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Vaishnavi Adkar பட்டம் வென்றார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில், அவர் 7-6, 6-4 என்ற செட்கணக்கில் இந்தியாவின் அங்கிதா ரெய்னாவை வென்றார்.*

*>>>>><<<<<*

*ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச நீச்சல் போட்டியில், இந்தியாவின் Rishabh Das இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றார்.*

*ஆடவர் 200 மற்றும் 50 மீட்டர் பிரிவுகளில் அவர் இப்பதக்கங்களை கைப்பற்றினார்.*

*>>>>><<<<<*

*ஆல் இங்கிலாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Lakshya Sen வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் சீன தைபேயின் Lin Chun Yi 21-15, 22-20 என்ற செட்கணக்கில் Lakshya Sen-ஐ வென்றார்.*

*>>>>>END<<<<<*